4th November 1966]

திரு. வை. சங்கரன்: புதிதாக விதித்துள்ள நிபந்தனைகள் என்னென்ன என்று சொல்ல முடியுமா?

THE HON. SRI R. VENKATARAMAN: It is a long list. As I have stated just now, if the hon. Member puts a particular question I would even place it on the table of the House. I cannot read a huge list.

*393 **கேள்வி.—திரு. அ. பெ. தர்மலிங்கம்:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம், அம்மாபேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனை சங்கத்தில் நடைபெற்றுவரும் ஊழல்பற்றி அந்த சங்க உறுப்பினர்களிடமிருந்து புகார் ஏதேனும் அண்மையில் வந்திருக்கிறதா?

(இ) ஆமெனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) ஆம். 1966 ஏப்ரலில் புகார் ஒன்று வந்தது.

(இ) சேலம் (கைத்தறி) தனித் துணைப் பதிவாளர் விசாரணை ஒன்றை நடத்தினர். பெரும்பாலான குற்றச்சாட்டுகள் பொய்யானவை அல்லது அற்பமானவை என அறிவிக்கப்பட்டுள்ளது. வாலாயமான குறைபாடுகளை நீக்குமாறு தனித் துணைப் பதிவாளர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். மேற்படி கூட்டுறவுச் சங்கத்தின் அலுவல்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

திரு. இராம. அரங்கண்ணல்: சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகள் அற்பமானவையாகவோ அல்லது உண்மைக்கு மாறானவையாகவோ இருந்திருக்கலாம். ஆனால், வாலாயமான குறைபாடுகள் என்று சொல்லப்படுகிற அந்தக் குற்றச்சாட்டுகள் எந்த ரகத்தைச் சேர்ந்தவை? அற்பமானவையா அல்லது ஆதாரபூர்வமானவையா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நடைமுறையில் சில குறைபாடுகள், தவறுகள் இருக்கலாம். விதிகளையொட்டி நடத்தவில்லை அல்லது காலத்திற்குள்ளாக ரிடர்ன் அனுப்பவில்லை என்பன போன்ற அந்த வாலாயமான குற்றச்சாட்டுகளைப் பொறுத்த வரையில், அவற்றை உடனடியாகத் திருத்தியனுப்ப வேண்டும் என்று சர்க்கார் அவர்களுக்குச் சொல்லியிருக்கிறது. அவையெல்லாம் உண்மையாக இருக்கிற காரணத்தினால் தானே அவற்றை திருத்த வேண்டும் என்று சொல்லமுடியும்?

திரு. வி. எஸ். எஸ். மணி: கூட்டுறவு சங்கங்கள் மூலமாகக் கடன் கொடுப்பதற்குப் பதிலாக ஹாண்ட்லூம் ஃபினன்ஸ் கார்ப்பரேஷன் மூலமாகத்தான் நெசவாளிகளுக்கு கொடுக்கப்படும் என்று விதி ஏற்பட்டால் கூட்டுறவு சங்கத்தில் ஏற்படக்கூடிய . . .

கனம் சபாநாயகர்: கனம் அங்கத்தினருடைய இந்தக் கேள்வி மூலக் கேள்வியையொட்டி எழக்கூடிய கேள்வி அல்ல.

[4th November 1966

SRI V. S. S. MANI : Sir, this is an allied question.

MR. SPEAKER : But the main question relates to a particular complaint.

திரு. சா. கணேசன் : இந்தச் சங்கத்தின் மீது சில குற்றச்சாட்டுகள் வந்தன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அவை சிறியதும், அற்பமானதும் ஆகும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். மிகப் பெரும் பணம் இதனால் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா? அப்படியானால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது? அப்படி வந்த நஷ்டமும் சட்டப்படி, விதிமுறைப்படி வந்ததுதானா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நஷ்டம் வந்ததாக சர்க்காரிடத்தில் புகார் எதுவும் வரவில்லை.

திரு. எம். எஸ். மணி : அந்தச் சங்க உறுப்பினர்களிடம் இருந்து ஊழல் குற்றச்சாட்டுகள் வந்திருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். அந்தக் குற்றச்சாட்டுகள் என்ன என்ன என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தக் குற்றச்சாட்டுகள் என்ன என்ன என்கிற தகவல் என்னிடத்தில் இல்லை. கனம் அங்கத்தினரிடத்தில் இருந்தால் அதை எனக்கு எழுதி அனுப்பலாம். சர்க்கார் நிச்சயமாகப் பரிசீலனை செய்யும்.

திரு. எஸ். முருகையன் : இந்தக் கூட்டுறவு சங்கத்தில்தான் அமைச்சர் பெயரிலேயே தப்பான கணக்கை எழுதிக் காட்டியிருக்கிறார்கள். இது சம்பந்தமாக விசாரணைகள் செய்யப்பட்டனவா? அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அது ஒரு சிறிய தவறுதான் அமைச்சர் பெயரில் விற்கப்பட்டதாக எழுதியிருக்கிறது. அதுவும் கடனுக்குக் கொடுத்ததாகத் தெரிகிறது. இதில் மந்திரிகளால் தப்பு ஏற்படவில்லை. மந்திரிகள் கூட்டுறவுச் சங்கங்களிலேயே வாங்கக் கூடாது என்று இல்லை. ஆக இதில் தவறு இல்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*394 **கேள்வி.—திரு. செ. மாதவன் :**
திரு. வை. சங்கரன் : } கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் 'வண்ணம் மாறும்' துணிகள், கைக்குட்டைகள் ஆகியவைகளை அதிகமாக ஏற்றுமதி செய்ய முயற்சிகள் ஏதேனும் அண்மையில் பரிசீலிக்கப்பட்டனவா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?